4 வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் திரு. C. ராஜலிங்கம், பி.ஏ., பி. எல்., 4 வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

அ.வ.எண். 559/2022 நாள்: 02.04.2025 வா.சா.2 – சிராஜுதின்

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, குறுக்கு விசாரணை -

நான் கணினி சம்பந்தப்பட்ட படிப்பு படிக்கவில்லை என்றால் சரிதான். எனக்கு தொழில் போட்டோ ஸ்டுடியோ வைத்துள்ளேன். எங்களுடைய கடை அரசால் அங்கீகரிக்கப்பட்ட இ சேவை மையம் அல்ல என்றால் சரிதான். நான் பதிவிறக்கம் செய்துள்ள வாட்ஸ் அப் குறுஞ்செய்திகள் தற்போது எங்கள் கணினியில் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.6 ஆவணத்தில் எந்த பிரிண்டர் மூலம் பிரிண்ட் எடுக்கப்பட்டது என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.6 ல் உள்ள புகைப்படங்களில் 6, 7 புகைப்படங்களில் யார் யாருக்கு அனுப்பினார்கள் என்ற விவரம் இல்லை என்றால் சரிதான். புகைப்படத்தில் அது தெரியாது. கணினியில் வைத்து பார்க்கும்போது தான் அந்த விவரங்கள் தெரியவரும். எந்த தேதியில் அனுப்பப்பட்டது என்ற விவரங்களும் அதில் இல்லை. இதர புகைப்படங்களில் மேற்படி விவரங்கள் உள்ளது என்றால் சரிதான். மொபைல் போனில் Screen shot எடுத்தால் மேற்படி விவரங்கள் வராது. மேற்படி 6, 7 புகைப்படங்கள் கணினியில் பதிவிறக்கம் செய்து எடுக்கப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி புகைப்படங்களில் தேதியை மறைத்து புகைப்படங்கள் கொடுக்கப்பட்டுள்ளது என்றும், எனவே நான் கொடுத்துள்ள சான்று செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. மேற்படி சான்றிதழ் 2022 ம் ஆண்டு கொடுக்கப்பட்டதாகும். அப்போது வழக்கு நிலுவையில் இருந்ததா என்ற விவரம் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.6 புகைப்படங்கள் யாரால் பெறப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. அதில் குறிப்பிட்டுள்ள

தேன்மொழி என்ற நபர் குறித்த விவரம் எனக்கு தெரியாது. சாதிக்பாட்சா கூறியதன் பேரில் சான்றிதழில் உள்ள விவரங்கள் கொடுக்கப்பட்டதாக முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கறிஞர் சாதிக்பாட்சா எனது உறவினரா என்றால் இல்லை. எனது அலுவலகத்தின் அருகில் அவரது அலுவலகம் உள்ளது. வழக்கறிஞர் சாதிக்பாட்சா கேட்டுக்கொண்டதன் பேரில் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 ல் ஆவணத்தில் உள்ள கடைசி புகைப்படத்தில் 05.07.2022 என்று தேதி குறிப்பிடப்பட்டுள்ளது. நான் சொன்ன தேதியில் அவ்வாறு பதிவிறக்கம் செய்யப்படவில்லை என்றும், வழக்கிற்காக உண்மைக்கு மாறாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. வழக்கறிஞர் சாதிக்பாட்சாவின் கைப்பேசியின் Hard disk, எந்த கம்பெனியின் மொபைல் போன் என்ற விவரங்கள் வா.சா.ஆ.6 ல் இல்லை. அந்த விவரங்கள் கொடுக்காததால் நான் கொடுத்த சான்று செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

**sd/-C.Rajalingom.**
4 வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.